# ஆன்லைன்குறித்துஎச்சரிக் கையாகஇருங்கள்

amazon future engineer



அடில் தனதுபுதிய ஃபோனைபயன்படுத்தத் தொடங்கும்போது இணையம் (ஆன்லைன்) எப்போதும் ஒரு சுமூகமான பயணமாகஇருக்கவில்லை என்பதைஉணர்கிறார்; வழியில் தடைகளும் தடங்கல்களும் உள்ளன! தன்னை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பதைக் கற்றுக்கொள்ள அவருக்கு நீங்கள் உதவ முடியுமா?

அடிலின் ஃபோனில் பல்வேறு செயலிகளில் அவருக்குப் பல செய்திகள், பதிவுகள் மற்றும் அறிவிப்புகள் வருகின்றன! நேற்றைய அறிவிப்புகளைப் பார்த்து வலதுபுறத்தில் உள்ளகேள்விகளைப் பற்றிசிந்தியுங்கள்:

௧:00 இரவு அடில்

- உங்கள் தொலைபேசி புகைப்படத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள்.
- இந்த வார இறுதியில் நீங்கள் பார்க்க வேண்டிய அதிகப்படியான மதிப்புள்ள நிகழ்ச்சிகள்!
- உங்களை அழ வைக்கும் பாலிவுட் நட்சத்திரங்களின் இதயத்தை உடைக்கும் கதைகள்.
- அழிந்து வரும்உயிரினங்களைப் பாதுகாக்கப் புதிய அறிவியல் ஆராய்ச்சி உதவுகிறது.
- ஒரு மர்மடைரியை ஒரு பெண் கண்டுபிடிக்கிறாள். அடுத்து என்னநடக்கிறது என்றுகூறினால் நீங்கள் நம்பமாட்டீர்கள்!

·இந்த தலைப்புச் செய்திகளுக்கு இடையேஉள்ள ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகள் என்ன?

·ஒவ்வொரு செய்தியிலும் பயன்படுத்தப்படும் தொனிஎன்ன (உ.ம்., உற்சாகம், கோபம்)?

·எந்தச் செய்திகளைத் திறக்க மிகவும் கவர்ச்சிகரமானதாகத் தெரிகிறது? ஏன்?

# கிளிக்பெய்ட்

## உங்களுக்குத்தெரியுமா?

கிளிக்பெய்ட் என்பதுவாசகர்களை கிளிக்செய்ய வைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு வகையானஆன்லைன் உள்ளடக்கம் (எ.கா., தலைப்பு, இடுகை அல்லது செய்தி). மீன்பிடிக்கும் போதுமீன்களைப் பிடிக்கத் தூண்டிலில் இரை இணைக்கப்படுவது போல ஆன்லைன் கிளிக்பெய்ட் நமது கிளிக்குகள் மூலம் நம்மைஏமாற்ற முயற்சி செய்கின்றன! இது பெரும்பாலும் மிகைப்படுத்தப்பட்ட அல்லது நாடகத்தனமான முறையில் எழுதப்படுகிறது; உற்சாகமான அல்லதுஅசாதாரணமான தகவலைத் தருவதாக உறுதியளிக்கிறது; மேலும் இணைப்பைக் வாசகர் கிளிக்செய்யத் தூண்டும் வகையில் தகவலை மர்மமாக வைத்திருக்கிறது. இந்தச் செய்திகள் வாசகர்ஆன்லைனில் ஈடுபட்டுள்ள பிற இடுகைகள், ரீல்கள் அல்லதுதேடல் முடிவுகளின் அடிப்படையில் இருக்கலாம். போலிச் செய்திகள், மோசடிகள் அல்லதுசந்தேகத்திற்கிடமான/தீங்குவிளைவிக்கும் தளங்களுக்கும் கிளிக்பெய்ட் வழிவகுக்கும்!

கீழே கொடுக்கப்பட்டுள்ள அம்சங்கள் கிளிக்பெய்ட்டில் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் எதை நீங்கள் இதற்குமுன் பார்த்திருக்கிறீர்கள்?




வேறு என்னஅம்சங்களைப் பற்றிநீங்கள் சிந்திக்க முடியும்? செய்திகள், தலைப்புச் செய்திகள் மற்றும் ஆன்லைன் போஸ்ட்களுக்கு உங்கள்எதிர்வினைகளைப் பற்றிஅறிந்திருப்பது கிளிக்பெய்ட்டை அடையாளம் காணவும், தீங்கு அல்லதுகையாளுதலில் இருந்து உங்களைப் பாதுகாக்கவும் உதவும். கிளிக் செய்வதற்கு முன்எப்போதும் சிந்திக்கவேண்டும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்!

1. டிஜிட்டல் மீடியா எழுத்தறிவு: கிளிக்பைட் என்றால் என்ன? (n.d.). GCFGlobal.

# ஆன்லைன்அச்சுறுத்தல்கள்

ஆன்லைன் மோசடியில் தனது அண்டைவீட்டாரின் அனுபவங்களை பகுப்பாய்வு செய்துஅடில் தன்னைபாதிக்கக்கூடிய அச்சுறுத்தல்களைப் புரிந்துகொள்ள உதவுங்கள். அதிர்ஷ்டவசமாக, உங்களிடம் Threat Buster 2.0 எனப்படும் ஒரு சிறப்பு டிவைஸ் உள்ளது, இது சில ஆன்லைன் ஆபத்துகளை அடையாளம் கண்டுள்ளது! இருப்பினும், அடில் தகவலறிந்தவராக இருக்கஉதவும் வகையில் சரியான ஆன்லைன் அச்சுறுத்தல் அனுபவத்தை நீங்கள் மனதளவில் பொருத்திப்பார்க்க வேண்டும்!



## இந்த ஆன்லைன்அனுபவங்களைஸ்கேன்செய்யுங்கள்!




1. ஒரு நாள், சரியான கடவுச்சொல்லை உள்ளிட்ட பின்னரும் ரியாவால் தனது மின்னஞ்சல் ஐடியில் உள்நுழைய முடியவில்லை. ஆனால் அவரது நண்பர்களுக்கு அவரது கணக்கில் இருந்து விசித்திரமான செய்திகள் வந்தன!

2. நினா. ஆன்டிக்கு அவர் லாட்டரியில் வென்றுள்ளதாகவும், பணத்தைப் பெற தனது கணக்கு விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் ஒரு செய்தி வருகிறது. அவர் விவரங்களைப் பகிர்ந்து கொண்டு அதற்கு பலனாக ரூ. 20,000 இழந்தார்!

3. பிரகாஷ் ஒரு ஆன்லைன் டியூஷன் நடத்துகிறார். அவர் தனது மாணவர்களின் தொடர்பு விவரங்கள் மற்றும் முகவரிகளைப் பதிவிறக்கம் செய்து, அவற்றை ஒரு மோசடிக்காரருக்கு விற்றார்!

4. கரோலின் ஓர் அறிமுகமில்லாத விளையாட்டைப் பதிவிறக்கிய பின் அவரது ஃபோன் வேலை செய்யாமல் போய்விட்டது.

5. யாரோ ஒருவர்ஃபைசானின் படங்கள், பெயர் மற்றும் மின்னஞ்சல் முகவரியை அவர் போல்நடித்து ஒரு கணக்கை உருவாக்கினார்!

______ ஹேக்கிங் என்பதுமேம்பட்டக் குறியீடுகளைப் பயன்படுத்தி மற்றொரு நபரின் டிவைஸ்/ கணக்கில் அவரதுஅனுமதியின்றி நுழைந்து தகவல்களைத் திருடுவது அல்லது தீங்குவிளைவிப்பது.

______ அடையாளத் திருட்டு என்பது ஒருவரின் தனிப்பட்ட தகவலைஅனுமதியின்றிப் பயன்படுத்துவது (எ.கா., போலி அடையாளத்தை உருவாக்குவது அல்லதுசட்டவிரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவது).

______ ஃபிஷிங் என்பதுமோசடி செய்பவர்கள் உண்மையானதாகத் தோன்றும் போலி செய்திகளை அனுப்பி மக்களைஏமாற்றி அவர்களின் சொந்தத் தனிப்பட்ட தகவலைப் பகிர்ந்து கொள்ள வைப்பது.

______ தரவுத் திருட்டு என்பதில் தனிப்பட்ட, ரகசிய அல்லதுநிதித் தகவல்களை சட்டவிரோதமாக எடுத்து விநியோகிப்பதை உள்ளடங்கும்.

______ மேல்வேர் என்பதுவைரஸ் போன்றகணினி மென்பொருளாகும், இது கணினிஅல்லது கணினிநெட்வொர்க்கை ரகசியமாகப் பாதிக்கிறது.

# நிதி மோசடி

### உங்களுக்குத்தெரியுமா?

இப்போதெல்லாம் பல பேர்போன மோசடிக்காரர்கள் தொலைபேசி அழைப்புகள், மின்னஞ்சல்கள் மற்றும் செய்திகள் மூலம்மக்களிடம் இருந்து பெருந்தொகையைக் கொள்ளையடிக்க முயற்சி செய்கிறார்கள். யார் வேண்டுமானாலும் அவர்கள் வலையில் விழக்கூடும்! பெரும்பாலும், அவர்கள் மக்களை பயமுறுத்தி அல்லது ஆசைகாட்டி அவர்களோடு ஒத்துழைக்க வைக்க முயற்சி செய்கிறார்கள். குடும்பத்தில் இணையத்தைத் தீவிரமாகப் பயன்படுத்தும் ஒரே நபர்அடில். ஆதலால் அவரது குடும்பத்தினர் இந்த மோசடிகளைத் தவிர்க்க உதவுவது அவரது பொறுப்பாகும். அவருக்கு உதவ முடியுமா?

### அடிலின் தந்தைக்கு அழைப்பு வருகிறது!





ஹலோ யார்பேசுகிறீர்கள்?



நான் திலக். பீகாரில் உள்ள்பகதூர்பூர் காவல்நிலையத்தில் இருந்து பேசுகிறேன். நாங்கள் ஒரு நபரைக்கைது செய்துள்ளோம். அவர் உங்களைஅவரது உறவினர் என்று கூறுகிறார். உங்கள் ஃபோன்எண் மற்றும் வங்கி விவரங்கள் சட்டவிரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப் பட்டிருப்பதைக் கண்டுபிடித்தோம்.



என்ன?! நேற்று நான் என் உறவினரைச் சந்தித்தேன்! அவர் பீகாரில் எப்படி இருக்கமுடியும்?



இதனால் நீங்கள் சிக்கலில் மாட்டிக் கொள்ளலாம். ஆனால் கவலைப்பட வேண்டாம். நீங்கள் நிரபராதி என்று எனக்குத் தெரியும். பாதுகாப்பாக இருக்க நான்கூறும் வழிமுறைகளைப் பின்பற்றுங்கள். உங்களை விடுவிக்கத் தேவையான ஆவணங்களை நாங்கள் ஆயத்தப்படுத்தும் வரை உங்கள் பணத்தைப் பாதுகாக்க 50,000 ரூபாயை வேறு ஒரு கணக்கிற்கு மாற்றுங்கள். 15 நிமிடங்களில் உங்கள்வங்கி குறித்தத் தகவலுடன் என்னைத் திரும்பக் கூப்பிடுங்கள். இல்லாவிட்டால் நாங்கள் உங்களுக்கும் உங்கள்உறவினருக்கும் அபராதம் விதிக்க வேண்டியிருக்கும்.

**அடில் தனதுதந்தைக்கு வழங்கக்கூடிய ஆலோசனை என்ன? அனைத்து சரியானவிருப்பத்தேர்வுகளையும் தேர்வுசெய்யவும்.**

A. இது ஒரு வாழ்வா சாவாசூழ்நிலை; அதிகாரியிடம் விவரங்களைக் அளிக்கவும்!

B. காவல் அதிகாரியிடம் அவரது அடையாளஎண்ணைக் கேட்டுஅதைச் சரிபார்க்க பகதூர்பூர் காவல்நிலையத்தின் அதிகாரப்பூர்வ தொலைபேசி எண்ணைஅழைக்கவும்.

C. அவர் கைதுசெய்யப்பட்டாரா என்றுசரிபார்க்க உறவினரை அழைக்கவும்.

D. புகார் அளிக்கசைபர் கிரைம்பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

E. இந்த இக்கட்டில் உதவிகோரி நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களைத் தொடர்பு கொள்ளவும்!



3. இந்த மோசடிகளுக்கு இரையாகாதீர்கள்! மோசடி செய்பவர்கள் உங்களை ஏமாற்றக்கூடிய 10 பொதுவான வழிகள். (2024, அக்டோபர் 14). டைம்ஸ் ஆஃப் இந்தியா.

# நிதி மோசடி

amazon future engineer

## அடிலின் அம்மாவுக்கு ஒரு செய்திவருகிறது!



பணம் சம்பாதிக்க விரும்பிகிறீர்களா? முழுநேர வேலையில் ஈடுபடமுடியவில்லையா? வீட்டில் இருந்தே வேலைசெய்யுங்கள். சமூக ஊடக போஸ்ட்களைப் பகிர்வதன் மூலம்மாதத்திற்கு ரூ. 8000 வரை சம்பாதிக்கலாம்! தொடங்குவதற்கு இங்கேபதிவு செய்யவும்: www.W3kwithUS.co/account login/index_432lxQz






வாவ், இப்போதெல்லாம் நீங்கள் ஆன்லைனில் எதையும் செய்யலாம்! ஒருவேளை நான்பதிவு செய்யவேண்டியது கட்டாயமாக இருக்கலாம்...

### அடில் தனதுதாய்க்கு வழங்கக்கூடிய ஆலோசனை என்ன?

A. இந்த வாய்ப்பைச் சரிபார்க்க வலைதளத்தில் தேடவும்.
B. URL நிறுவனத்தின் பெயருடன் பொருந்துகிறதா என்றுசரிபார்க்கவும்; அது சந்தேகத்திற்குரியதாகத் தோன்றுகிறதா?
C. இது ஒரு சிறந்த வாய்ப்பு; அதை பயன்படுத்திக் கொள்ளுங்கள்!
D. அவர்களை எச்சரிக்க சைபர் கிரைம்செல் அல்லதுகாவல்துறையைத் தொடர்பு கொள்ளவும்.
E. ஃபோன் எண்ணைத் தடுத்து புகார்அளிக்கவும்.

## அடிலின் அங்கிளுக்கு அழைப்பு வருகிறது!



வணக்கம்?



வணக்கம் சார், நான் நேஹா, சேட்டர் வங்கியில் இருந்து பேசுகிறேன். உங்கள் KYC மற்றும் கணக்கு விவரங்கள் அரசாங்க விதிகளின்படி புதுப்பிக்கப்பட வேண்டும். அதன் மூலம்நீங்கள் பாதுகாப்பாக இருக்க முடியும். இல்லாவிட்டால் உங்கள்கணக்கை நாங்கள் இடைநிறுத்தம் செய்யவேண்டீயிருக்கும். நான் உங்களுக்கு இணைப்பை அனுப்புகிறேன், தயவுசெய்து இதை அழைப்பில் இருக்கும்போது செய்யுங்கள்.



சரி. உங்கள் இணைப்பைத் திறக்கவும்.




### அடில் தனதுமாமாவுக்கு என்னஆலோசனை வழங்கமுடியும்?

A. அரசாங்க விதிகளின்படி படிவத்தை நிரப்பவும்.
B. சரிபார்க்க அவரதுவங்கி மக்கள்தொடர்பு மேலாளரை அழைக்கவும். அவர் கணக்கு வைத்திருக்கும் வங்கி ஏன் அவரது கணக்குவிவரங்களைக் கேட்கவேண்டும்?
C. வலைத்தளம் நம்பகமானதா இல்லையா என்பதைச் சரிபார்க்கவும்: URL, மின்னஞ்சல் மற்றும் தளவமைப்பு, வடிவமைப்பில் பிழைகள் உள்ளதா?
D. சைபர் கிரைம்செல்லைத் தொடர்பு கொள்ளவும்!

# பதில்களின் திறவுகோல்

## ஆன்லைனில் எச்சரிக்கையாக இருங்கள்

அடில் பின்வரும் கதைகளில் கிளிக்செய்யத் தூண்டப்படுவார்:

- இந்த வார இறுதியில் நீங்கள் பார்க்க வேண்டிய Binge-Worthy நிகழ்ச்சிகள்!
- உங்களை அழ வைக்கும் பாலிவுட் நட்சத்திரங்களின் இதயத்தை உடைக்கும் கதைகள்.
- அறியப்படாத டைரியைக் கண்டுபிடிக்கும் பெண், அடுத்து என்னநடக்கும் என்றுநீங்கள் நம்பமாட்டீர்கள்!

மற்ற கதைகள்நடுநிலையான தொனியைப் பயன்படுத்தினாலும் இவை அவரை உற்சாகப்படுத்தவும் அவரை மிகவும் ஆர்வமாக மாற்றவும், அவர் கிளிக்செய்யாவிட்டால் முக்கியமான தகவல்களைத் தவறவிடுவார் என்ற உணர்வைஏற்படுத்தவும் ஓர் உணர்ச்சிபூர்வமான தொனியைப் பயன்படுத்துகின்றன! சுருக்கமாக, அவை கிளிக்செய்ய வேண்டிய தலைப்புச் செய்திகள்!

## ஆன்லைன்அச்சுறுத்தல்கள்

1. ஹேக்கிங்
2. ஃபிஷிங்
3. தரவுத் திருட்டு
4. மேல்வேர்
5. அடையாளத் திருட்டு

## நிதி மோசடி

**அடிலின் தந்தையின் கதை:**

ஆ. காவல்துறை அதிகாரியிடம் அவரது ஐடி எண்ணைக் கேட்டு, அதைச் சரிபார்க்க பகதூர்பூர் காவல் நிலையத்தின் அதிகாரப்பூர்வ தொலைபேசியை அழைப்பது.
இ. அவர் கைது செய்யப்பட்டாரா என்று சரிபார்க்க உறவினர் சகோதரரை அழைப்பது.
ஈ. புகார் அளிக்க சைபர் கிரைம் பிரிவைத் தொடர்பு கொள்வது.
உ. துன்பத்தில் இருந்து விடுபட, நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களை ஆதரிக்க தொடர்பு கொள்ளவும்!

**அடிலின் தாயின் கதை:**

அ. வாய்ப்பைச் சரிபார்க்க இணையத்தில் தேடுதல். ஆ. நிறுவனத்தின் பெயருடன் URL பொருந்துகிறதா என்று சரிபார்ப்பது, அது சந்தேகத்திற்குரியதாகத் தோன்றுகிறதா?
ஈ. சைபர் கிரைம் பிரிவு அல்லது காவல்துறையைத் தொடர்புகொண்டு அவர்களுக்கு தெரிவிப்பது.
உ. எண்ணைத் தடுத்து புகாரளிப்பது.

**அடிலின் மாமாவின் கதை:**

அடிலின் வங்கியின் மக்கள் தொடர்பு மேலாளரை அழைக்கவும். அவர் கணக்குவைத்திருக்கும் வங்கியே ஏன் அவரதுகணக்கு விவரங்களைக் கேட்க வேண்டும்?அடிலின் வலைத்தளம் நம்பகமானதா இல்லையா என்பதைச் சரிபார்க்கவும்: URL, மின்னஞ்சல் மற்றும் தளவமைப்பு, வடிவமைப்பில் பிழைகள் உள்ளதா?
ஈ. சைபர் கிரைம் பிரிவுடன் தொடர்பு கொள்வது!

